UNIVERSITY OF JAFFNA LIBRARY 2006 PERIODICAL SECTION

விலை சதம் -/25

> நம்முடைய நாகரிகமும் பண்பாடும் தேவைகளைப் பெருக்குவதைப் பொறுத்திராமல் தேவைகளைக்குறைப்பதையே பொறுத்துள்ளது.
>
> காந்தியடிகள்

# காந்தீயம்

மலர் 17 (காந்தி ஆண்டு 110) 1980 மார்ச்—செப்டம்பர் இதழ் 6-12

# உலக அமைதிக்குப் பரவல்முறை பொருளாதார அமைப்பு

**டாக்டர் குமரப்பா கூறுகிறார்**

**"பொருளாதாரச் சிக்கல்களே இன்றைய உலக நோய்க்குக் காரணம் வன்முறையையும் போர்களையும் ஒழிக்க வேண்டுமென்றால் உற்பத்தி பரவல் முறையில் அமைய வேண்டும். சுயதேவையைப் பூர்த்தி இலட்சியத்தை ஏற்க வேண்டும்.'' என்று காந்தியடிகளின் நெருங்கிய சீடரும் சிறந்த பொருளாதார நிபுணருமான டாக்டர் குமரப்பா கூறுகிறார்.**


மகாத்மா காந்தியடிகள் உலக நாடுகளுக்குள் எழும் சச்சரவுகளின் காரணங்களையும் அவற்றைத் தவிர்க்கும் வழிகளையும் எப்படி ஆராய்ந்தார் என்றும் எச்சாதனங்களை அவர் கையாண்டார் என்பதைப் பற்றியும் கூற விரும்புகிறேன்.

### சத்தியமே கடவுள்

பல்லாயிரக் கணக்கான வருடங்களாக இந்துக்கள் அமைதியை நிலைநாட்டும் வழியில் வாழ்க்கையை முறைப்படுத்தியுள்ளனர். ஆகவே அகிம்சையும் சத்தியமும் எங்களிடையே வேரூன்றி இருக்கின்றன. அவர்கள் சத்தியமே கடவுளென்றும் அறமே வாழ்க்கையின் பயனென்றும் கொண்டார்கள். அதுமட்டுமல்ல பல்லுயிரும் தத்தம் தர்மத்தைப் பெற்றிருந்தன. மனிதனின் அறம் அவன் தன்னை அமைதியில் அமைத்துக்கொள்வது.

### வாழ்க்கை முறையை மாற்ற வேண்டும்

இன்று வாழ்க்கைத் தத்துவம் மனிதனை ஒரு பொருளாதார பிராணியாகச் செய்து விட்டது. பண்டங்களை உற்பத்தி செய்வதே அவன் தர்மம் என்றாகிவிட்டது இக்காலம். இது மனிதவாழ்க்கையின் பயனை இழிவுபடுத்துவதேயாகும். பண்டங்களை ஏராளமாகப் பெற்றிருப்பதிலே நம் வாழ்க்கை அடங்கி விடாது சோற்றாலேயே வாழ்வதில்லை. தவறான மதிப்புகளை உண்டாக்



கிக் கொண்டு மனிதன் தன் தர்மத்திலிருந்து வழுவி விட்டான். நாம் அமைதியை உண்டாக்க விரும்பினால் நம் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றியமைக்கச் சித்தமாக இருக்க வேண்டும். அவ்வழியில் இன்று அவசியமெனக் கருதும் பல பண்டங்களை நாம் கைவிடத் தயாராக வேண்டும். தர்மத்தை நிலைநாட்டுவதனாலேயே உலக அமைதி உண்டாகும்.

### அணுகுண்டு செய்தது பைத்தியக்காரத்தனம்

வலுப்பெற்றவர்களின் தர்மம், மெலிந்தவர்களைக் காப்பாற்றுவது தான் புலியின் தர்மம் பிறிதொன்றைக் கொல்லுவதாகலாம். ஆயின் அது மனித தர்மம் அன்று. மனிதத் தன்மையில் இவ்விஷம் பரவி எப்படி அவன் யுத்தத்திற்கு தயாரானான் என்றும், அவன் துய்ப்புப் பண்டங்களால் அழுத்தப்படுகின்றான் என்றும் நாம் ஆய்ந்தறிய வேண்டும். அமைதியாகச் சிந்திப்பின் அணுகுண்டு செய்ததே பயித்தியத்தின் அறிகுறி. அறத்தினின்றும் இழிந்து இம்சைக் காட்டிற்குள் திக்குத் தெரியாது அலைகின்றான். மனிதன் நிறைவடைவதற்கும் அவனை வெளிப்படுத்திக் கொள்வதற்கும் மீண்டும் தர்மம் வற்புறுத்தப்படவேண்டும். இதைச் செய்யவே காந்தியடிகள் சத்தியம், அகிம்சை இவைகளின் ஆராய்ச்சியாக வாழ்க்கையை அமைத்தார்.

### உலக நோய்க்குக் காரணம் என்ன?

இன்றைய உலக நோய்க்குக் காரணம் அதன் பொருளாதாரச் சிக்கல்களே. நாம் வாழ்க்யையின் பயன் ஏது என்பதை அறியாது மண் பொருளைப் பெற அலைந்து திரிகின்றோம். எனக்குள்ள சிறு பொழுதில் அனுபவ ரீதியில்

(3-ஆம் பக்கம் பார்க்க)

★ காந்தீய சர்வோதய தத்துவ வெளியீடு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி ஆண்டு 110

1980 மார்ச் — செப்டம்பர்


## குமரப்பாவின் சிந்தனைகள்

டாக்டர் குமரப்பா தலைசிறந்த பொருளாதார சிந்தனையாளர்; செயல் வீரர். நல்ல கிறித்தவ குடும்பத்தில் பிறந்தவர். மேற்கத்திய கல்வி கற்றவர். மேலை நாடுகளின் பொருளாதாரத்தை அறிந்தவர். சத்தியத்தைத் தேடிய காந்தியடிகளோடு சேர்ந்த பின் அண்ணலின் வழியில் புதிய பொருளாதாரத்திற்கு உருக் கொடுத்தவர்.

கிராமத் தொழில்களை வளர்ப்பதற்காக அல்லும் பகலும் உழைத்தவர் குமரப்பா.

டாக்டர் குமரப்பா நிலையான பொருளாதாரத்தை உருவாக்க மனித சமுதாயத்தையும் கடந்து, நம்மைச் சுற்றியுள்ளவற்றின் நலனையும் கவனிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தினார். விலங்குகள், பறவைகள், நீர், காற்று, ஒளி, ஆகாயம் ஆகியவற்றைப் பாழ்படுத்தினாலும் நம் வாழ்க்கை சீர் கெடும் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

28 ஆண்டுகளுக்கு முன் டக்டர் குமரப்பா ஆற்றிய உரையை 'காந்தீயம்' பத்திரிகையில் பிரசுரித்துள்ளோம். இவரது கருத்துக்கள் இன்றைய சூழ்நிலைக்கு மிகப் பொருத்தமாக இருப்பதைக் காண்கிறோம்.

இங்கிலாந்தின் சிறந்த பொருளாதார நிபுணரான திரு. ஷுமாக்கரின் கருத்துக்களையும் பிரசுரித்துள்ளோம்.

நமது பொருளாதார அமைப்பில் எண்ணற்ற சிக்கல்கள் உள்ளன. இதனால் நமது சமுதாய வாழ்க்கை அமைதியற்று திக்குமுக்காடுகின்றது. இந்த இக்கட்டிலிருந்து மீள நமக்கு வழி காட்டுதல் தேவை. இதனை உணர்ந்து டாக்டர் குமரப்பாவின் கருத்துக்களை ஆராய்ந்தால் நாடு நலம் பெறும்.


### மறுமலர்ச்சி

முகவரி:

30, புகையிரத நிலைய வீதி, அட்டன்.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி காண வேண்டுமென்ற நோக்கோடு வெளியாகியுள்ள மறுமலர்ச்சி எனும் இந்த மாத இதழ் ஒரு அரசியல் சார்புள்ள இதழ் போல பல அரசியல் கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது.


# காந்திய பொருளாதாரமே உலகை உய்விக்கவல்லது

— ஷுமாக்கர் உரை —

''காந்தியடிகளும், டாக்டர் குமரப்பா அவர்களும் கூறிய பொருளாதாரத் தத்துவங்களை பெரிய நிபுணர்களும் பொருளாதார வல்லுநர்களும் வெறும் கனவுகள் என்று அன்று நகையாடினர். ஆனால் காந்திஜி வழியைப் பின்பற்றினால்தான் உலகம் உய்ய முடியும் என்றும், உற்பத்தி விநியோக முறைகளில் காந்திஜி காட்டிய வழியைப் பின்பற்ற வேண்டுமென்றும் இன்று சிந்தனையாளர்கள் உணரத் தொடங்கியுள்ளனர் என்றும் இங்கிலாந்தின் சிறந்த பொருளாதார நிபுணரான திரு. ஷுமாக்கர் கூறுகிறார்.

பொருளாதாரத் துறையில் இருப்பவன் என்ற காரணத்தால் இந்நாளில் காந்தியடிகளையும், அவர்களைப் பின்பற்றிய டாக்டர் குமரப்பா அவர்களைப் பற்றியும் நினைவு கூராமலிருக்க முடியவில்லை. காந்தியடிகளும் குமரப்பா அவர்களும் கூறிய ஆழ்ந்த பொருளாதாரக் கொள்கைகளைப் பெரிய நிபுணர்களும், பட்டதாரிகளும் கவைக்குதவாத வெறும் கனவுகள் என எள்ளி நகையாடினார்கள். ஆனால் இருபெரும் மகான்கள் அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. தற்போதையப் பொருளாதாரத் திட்டங்கள் வெட்டுக்கிளி பயிரை அழிப்பதுபோல உலகையே பாழடையச் செய்துவிடும் என்றனர். இன்றைய உலகில் பொருள் வளம் அதன் தேவைக்கேற்ற அளவு சரியாகவே உள்ளது அதனை ஈடுகட்டவே அதனால் முடியும். ஆனால் உலகத்தாரின் பேராசைகளுக்கெல்லாம் ஈடுகொடுக்க இயலாது.

1972ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மிக முக்கியமான நூல் 'வளர்ச்சியின் வரையறை' என்பதாகும். உலகை நாம் சுரண்டும் முன்பாக உலகம் நம்மையே சுரண்டிவிடும் என்பது இந்நூலில் வலியுறுத்தப்படும் கருத்தாகும். இதுபோன்று 1972இல் நடைபெற்ற மகாநாடுகள் அனைத்திலும் முக்கியமானதாகக் கருதப்படுவது ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற உலகத் தொழில் உறவு பற்றிய மகாநாடாகும். திருமதி இந்திரா காந்தி அவர்களும் இதில் கலந்து கொண்டார்கள். உலகில் இயந்திரத் தொழில் வளர்ச்சி அதை யொட்டிய துணைத் தொழில்கள் ஆகியவற்றால் உலகம் நாளுக்கு நாள் நலிந்து வருகிறது என்பதை இம் மகாநாடு தெளிவாக்கியது. இவற்றின் பரிதாபகரமான விளைவுகளைக் கண்கூடாகப் பார்க்கத் தொடங்கி விட்டோம். மிக முக்கியமான நூல், மிக முக்கியமான மகாநாடு ஆகியவற்றையும் போல் சென்ற ஆண்டு உலகெங்கும் நடைபெற்ற மாணவர் புரட்சிகளும் குறிப்பிடத்தக்கவை. உலகப் பொருளாதாரத்தின் மூலதனம் அழிந்து வருவதை மேலே கண்ட நூல் சுட்டுகிறது. இயந்திரத் தொழில் கேடுகளை மாநாடு விரித்துக் கூறியது. இவைகளின் விளைவாக ஏற்பட்டுள்ள மாணவர் கிளர்ச்சிகள் மக்களிடையே நிலவி வரும் அதிருப்தியைக் காண்பிக்கிறது.

இந்தச் செய்தியைத்தான் அக்காலத்திலேயே காந்தியடிகளும் குமரப்பாவும் சொல்லி மக்களை எச்சரித்தனர். இதனாலேயே இவ்விருவரும் தங்கள் வழியில் தனியாகவே நடந்தார்கள். இப்பொழுதுதான் மக்கள் அம்மகான்களின் போதனைகளையும், நீண்ட எதிர்கால நோக்கினையும் உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

உலகெங்கும் சிந்தனையாளர்கள் புதிய வழியில் உற்பத்தி விநியோக முறையின் மாற்றம் பற்றி வெகுவாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள். இத்துறையில் அறிவைக் குவிப்பதற்கும், பரப்புவதற்கும் திட்டம் வகுக்கிறார்கள். இதற்காகவே இடைநிலைத் தொழில் வல்லுநர்களின் கூட்டத்தை அதிகரிக்க முயற்சி நடக்கிறது. சிக்கலான இயந்திரங்களின் ஆதிக்கம் இல்லாத எளிய மலிவான முறையில் மக்களிடையே பங்கீட்டுப் பொருளாதாரத்தை பரப்பி வருகிறார்கள். இந்தப் பொறுப்பு ஒரு நாட்டினுடையதாகவோ ஒரு நிறுவனத்தின் பொறுப்பிலோ மட்டும் இயங்கக் கூடாது. இங்கிலாந்தில் நாங்கள் ஒரு பயிற்சி நிலையம் தொடங்கியுள்ளோம். இம்மாதிரி நிறுவனம் ஒன்றிரண்டு இருந்தால் போதாது. உலகெங்கும் பலப்பல ஆய்வு நிலையங்கள் தோன்ற வேண்டும். அண்மையில் காசியில் இதற்காகவே ஓர் ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிலையம் தாழ்ந்த நிலையில் உள்ளவர் முதல் மக்களனைவருக்கும் குறிப்பாகக் கிராம ஊழியர்களுக்கும், இன்னோரன்ன பிறருக்கும் தங்கள் ஆராய்ச்சியின் பயனை அவ்வப்போது தெரிவிக்கும்.

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் நயம்

# குழந்தைக்குரல்

**காந்தியடிகள் இலங்கை வருகையின் 50 ஆண்டு நிறைவு மலர்.**
**ஆசிரியர் க. ச. கந்தசாமி**

எல்லோருக்கும் கவிதை வருவதில்லை. கவிதை வருவது வேறு. பாட்டு எழுதுவது வேறு.

அழகு உணர்ச்சியும் ஆர்வமும் அகத்தினுள் நின்று உந்த, வெளியே வாலாயமான சொற்கோப்பு இருந்தால் கவிதை பிறக்கின்றது. திரு. கந்தசுவாமி அவர்கட்கு உத்வேகம் அபரிதமாக உள்ளது. இந்நூலில் 41 பாடல்கள் உள்ளன. சிறுவர் உள்ளங்களுக்கு ஏற்ற உருவகங்கள் பல. உருவகங்கள் என்பது இங்கே அகத்தின் உருவங்களை.

குடும்பம், மனை ஆகியவற்றோடு கடவுளர், மிருகங்கள் பற்றிய பாடல்கள் எளிய சந்தத்தில் பழகிய சொற்களில் பரிணமித்துள்ளன. புலவர் குழந்தை ஆண்டிற்காகப் பாடினர்; ஆனல் பாடல்கள் உலகத்தை அளாவி நிற்கின்றன. அனுபவ இன்ப உணர்வு பீறிட்டு ஒவ்வொரு பாடலும் நெஞ்சைத் தொடுவனதாயுள்ளன. பாடல்களின் உருவங்களும் குழந்தை உருவங்கள். இடக்கரடக்கல், மடக்குச் சொற்கள், முதலியன அங்கில்லை.

பாடல்களைக் கொண்டு, குழந்தைகட்கு ஓர் நெறியையே புலவர் எடுத்துக் கூறுகிறர். குழந்தைகட்கு வீட்டு மிருகங்களைக் காட்டுகிறர். அதன்பின்பு தோட்டத்திற்குக் கூட்டிக்கொண்டு போகிறர். அதன்பின்னர் சமூகத்திற்கு உழைத்த மேதாவிகளான காந்தி லெனின் இருவரையும் அறிமுகப்படுத்துகிறர். சமூக சேவையைக் காட்டுகிறர்.

சில பாடல்களைப் பார்ப்போம். அவை நல்ல விமரிசம் செய்யும்.

(1) பசியும் பிணியும் பதைக்க வதைத்த
பண்டை இரசிய நாட்டிலே
பகிர்ந்து மகிழ்ந்து வளரும் இந்நாள்
பாரெல்லாம் புகழோச் சுதே

(2) வெட்டி அள்ளிப் போடு மண்ணை
மேடு பள்ளம் மேவி வர—வெட்டி
எட்ட ஊரைக் கிட்டவைக்கும்
எங்கள் பணியை வெற்றி யாக–வெ
மாவலியின் பாய்ச்சலான
வேர்வை வெள்ளம் பாய வெட்டு

முதலாம் பாடலில் வள்ளுவரைக் கொண்டே இரசியாவைப் புகழ்கிறர் புலவர். இரண்டாவது பாட்டிலே கிராமங்களை அணையவைக்க, தெரு, பாதைகள் உருப்பட வேண்டும் என்ற உண்மையைப் புலவர் இலகுவாகச் சொல்கிறர். மாவலியின் பாய்ச்சலென வேர்வை வெள்ளம் பாய வெட்டு என்கின்ற பொழுது, நிலத்தைப் பண்படுத்துவதால் எத்தனை காரியங்கள் செய்யலாம் என்பதைப் புலவர் சிறுவர் உள்ளங்களில் பதியவைக்கிறர்.

திரும்பத் திரும்பப் படித்து இன்புறக்கூடிய சிறுவர்க்கான கவிதைத் தொகுதி இந்நூல், ஆசிரியர் க. ச. கந்தசாமி, பெரியவர்க்கும் பாடல்கள் எழுதினல் இன்னும் உயர் கவிதைகள் வரும் என்பது திண்ணம்.

இ. இ.

## உலக அமைதிக்குப் . . . .

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள நிலையைத் துருவி ஆராய்ந்து அனுபவ சாத்தியமான பரிகாரங்களையும் சொல்ல முயலுகின்றேன்.

### சில தவறுகளின் பலனே உலகப் போர்கள்

இன்றைய உலக யுத்தங்கள் தனித்து நிகழ்பவையன்று சாதாரண மக்கள் விஷயம் தெரியாமல் தினந்தோறும் செய்யும் தவறுகள் பலவற்றின் தொகுப்பின் பயனகவே யுத்தம் தோன்றுகின்றது. யுத்தம் சில தலைவர்களால் தோற்றுவிக்கப்படுவதாக காணப்படினும், நம்முடைய தினசரி வாழ்க்கையாலேயே அவை நிகழ்கின்றன. உதாரணமாக நகர மக்கள் பால் வாங்குகிறர்கள். ஆனல் அவர்கள் கன்றுக்குப் பால் விடப்பட்டதா, பால்காரனின் குழந்தைக்குப் பால் கொடுக்கப்பட்டதா என்பதைத் தெரிந்துகொள்வதில்லை. கன்றுகளுக்கும், பால்காரனின் குழந்தைகளுக்கும் கொடுக்கப்பட்டு மீதாத பாலாயின் அதை வாங்குவது அதர்மமே. அத்தகைய சிறு அதர்மங்கள் குவிந்து உலக யுத்தங்களாக விரிகின்றன. ஆகையால் உற்பத்தியாளன், பண்டங்களைத் துய்ப்பவன், விநியோகம் செய்பவன் ஆகியவர்களிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுவது அவசியமாகின்றது. அதற்கு உற்பத்தியைப் பரவலாக அமைக்க வேண்டும். சுய தேவைப் பூர்த்தி இலட்சியத்தை ஏற்க வேண்டும். இவ்வழியில் யுத்தத்தின் காரணங்களை அகற்ற வேண்டுமென்று காந்தியடிகள் கூறினர்.

### குவியல் முறை உற்பத்தி அதர்மம்

இன்று உற்பத்தி குவியல் முறையில் நடைபெறுகிறது. மூல கச்சாப் பொருள்களோ உலகின் பல மூலைகளிலிருந்தும் சேகரிக்கப்படுகின்றன. முன்னேற்றமடையாத மக்களிடமிருந்து அவை பறிக்கப்படுகின்றன. இதெல்லாம் அதர்மம் அல்லவா?

### போருக்கான மூல காரணங்கள்

விநியோக முறையும் இயற்கையை ஒட்டி அமைவதில்லை. செயற்கை முறையில் தேவைகள் பெருக்கப்படுகின்றன. விற்பனை முறை அதற்கு வழி செய்கின்றது. இதுவும் அதர்மமே. இது பலாத்காரத்திற்கே வழியிடுகின்றது.

### தேவைக்கும் வாங்கும் பண்டங்களுக்கும் சம்பந்தமில்லை.

துய்ப்பவனின் இயற்கைத் தேவைக்கும், அவன் வாங்கும் பண்டங்களுக்கும் பொருத்தமும் இல்லை, முறையுமில்லை. உற்பத்தியாளனை நிலையிலமர்த்தும் வண்ணம் துய்ப்பு முறைப்படுத்தப்படுகிறது. விநியோகிக்கும் வியாபரியின் நலனும் பேணப்படுகிறது. இம்முறையால் திடீரென்று கலவரங்கள் தோன்றுகின்றன. அவை போருக்கு நம்மை இட்டுச் செல்வன. முதலாளித்துவ முறை சாம்ராஜ்ய குவியல் முறை உற்பத்தியும் அமுலிலிருக்கும் போர்கள் மனித வாழ்க்கையின் ஒரு அம்சமாகவே நிலைத்துவிடும். வேண்டுகோள்களும், விண்ணப்பங்களும் போர்களை நிறுத்தா.

### சுய தேவையும் பரவல் முறையுமே பரிகாரம்

காந்தியடிகள் சுயதேவைப் பூர்த்தியையும், உற்பத்தியைப் பரவலாய் அமைப்பதையும் வற்புறுத்தினர். சுய தேவை அடிப்படையில் நாம் செல்வது உலக நாடுகள் எல்லாவற்றுலும் எளிதாக ஏற்கக்கூடிய வழி. பெரியவர்களைப் பார்த்துத் தாம் சிறியவர்கள் என்று ஏங்க வேண்டியதில்லை. அவரவரால் ஆவதை அவரவர்கள் செய்யலாம். இது

(4-ஆம் பக்கம் பார்க்க)

**நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதியை ஏற்படுத்துவது என்றால் என்ன?

அமெரிக்க அகிம்சை வீரரும் அறிஞருமான பேராசிரியர் டாக்டர் ஜோர்ஜ் வில்லபி வெளியிட்ட கருத்துக்கள். இவர் அகில இலங்கைக் காந்தி சேவா சங்கமும் அறவழி போராட்டக் குழுவும் சேர்ந்து நடத்திய அறப்போராட்ட பயிற்சி முகாமில் பங்கு பற்றியவரென்பது குறிப்பிட்த்தக்கது.

அகிம்சை என்ற சொல்லின் மரபான பொருள் கொல்லாமை, துன்புறுத்தாமை என்பதாகும். இப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு மகாத்மா காந்தியடிகள் விரிவான புதுப்பொருள் ஒன்றையும் தந்தார். அதுதான் அமைதியை ஏற்படுத்த நேரடியான செயல் புரிதல், பணியாற்றுதல் என்பதாகும்.

அமைதி ஏற்படுத்தும் பணி மூன்று நிலைகளை உடையது. அவையாவன; (1) சிக்கல் இன்னதென்று ஆராய்ந்து அறிதல் (2) சிக்கலைத் தீர்த்து அதன் பின் காண விரும்பும் புத்துலகு பற்றிய கருத்து (Vision) (3) சிக்கலைத் தீர்க்கச் செயல் முறைகள்.

எனவே அமைதிப் பணியின் முதல் நிலை சிக்கல்களை இனங்கண்டு கொள்ளலாகும். உலகில் நம்மைச் சுற்றி எவ்வளவோ வன்முறைகள் இருந்த பொழுதிலும் நாம் அவற்றைப் பற்றிப் பெரும்பாலும் சிந்திப்பதே இல்லை. நமக்கு மிக அருகில் நடக்கும் வன்முறைகளைக்கூட நாம் அறியவில்லையாயின் நம்மால் அமைதிப் பணிக்கு உண்மையில் ஒன்றும் செய்ய முடியாது. அமைதிப் பணியில் ஈடுபட விரும்புபவர் முதலில் தனக்கு அருகில் நிகழும் அன்றாட வன்முறைகளை ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

இருவகையான அமைதிப்பணியாளர்கள் உண்டு. முதலாவது வகையினர் நீதிக்காகச் செயலாற்ற முற்படுவர். இரண்டாவது வகையினர் இருதரப்புகளுக்குமிடையில் சமாதானம் செய்து வைக்க முற்படுவர். இவரை 'இடையிட்டுச் சமரசம் காண்பவர்' எனக் குறிக்கலாம். முதலாவது வகையினரே பெரிதும் எனது போற்றுதலுக்கு உரியவர்.

உலகத்தில் எல்லாவிதமான அநீதிகளும் நீக்கப்படவில்லையாயின் உண்மையான அமைதி ஏற்பட முடியாது என நான் உறுதியாக நம்புகிறேன். அநீதிகளுக்கு எதிராகப் போராடி நாம் வெற்றி பெற்றாக வேண்டும். அதற்கு நாம் நமது போராட்ட நடைமுறைகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அமைதி ஏற்படுத்த முயல்பவன் அநீதி மலிந்த சமூகத்தின் போலித்தனமான அமைதியை உடைத்தெறிய வேண்டும். எனவே அமைதி ஏற்படுத்துபவன் ஒரு வகையில் 'தொல்லைகள்' பல தருபவனாகக் காட்சி தருகிறான். போலியான வெளி தோற்றத்தைத் தகர்த்து வன்முறைகளை இனங்கண்டு சரிசெய்ய முற்படுகிறான்.

## உலக அமைதிக்குப் . . . .

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு அரிய உண்மை. பொறுப்பும் கூட. ஆனால் தன்னடக்கமும் தியாகமும் இல்லாமல் இதைச் செய்ய முடியாது. நாம் நம் பகுதி வேலையை ஏற்கத் தயாரா?

### சீலம், நல்லெண்ணம், கூட்டுறவு வளர வேண்டும்

நம்மிடையே நிலையான அடிப்படை சீலம் இருக்கின்றது. அதன் வலிவைக் கொண்டு ஒவ்வொரு நாட்டையும் பிறிதுடன் கூடிப் பழகவும், சீல அடிப்படையில் விவகாரங்களை அமைத்துக்கொள்ளச் செய்யவும் முடியும். குழந்தைகளின் படிப்பு முறையை மாற்றி அவர்களெல்லாம் வளர்ந்தெழுந்து, சீலத்தின் உதவியை யல்லாமல், ஆயுதங்களின் உதவியை நாடாதிருப்பவர்களாச் செய்ய வேண்டும். கூட்டுறவு, நல்லெண்ணம், பரஸ்பர விளக்கம், இம்முறைகள் வளரும் போதே, நிலையான அமைதி உலகில் ஏற்பட முடியும். அத்தகைய மெலிந்தோரை வலியோர் சூறையிட மாட்டார்கள், முன்னேற்றமடைந்தோர், அடையாதவர்களை, நலியார், சிறியோரைப் பெரியோர் பணியச் செய்ய மாட்டார். அவ்வாறு மனித உறவுகள் வளரும் பொழுதே உலகில் அமைதியும் நல்லெண்ணமும் நிலைபெறும்.

(13-12-1952இல் வியன்னாவில் நடைபெற்ற உலக சமாதான காங்கிரஸ் மாநாட்டில் ஆற்றிய உரை.)

## தமிழகம்

மாத மிருமுறை வெளியீடு

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் சார்பில் வெளியிடப்பட்ட தமிழகம் எனும் மாத மிருமுறை வெளியீட்டின் முதல் இதழ் கிடைக்கப் பெற்றோம்.

ஒரு அரசியற் கட்சிப் பத்திரிகைக்கு என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டுமோ அத்தனையையும் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது இந்த இதழ்.

## அன்பர் தபால்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் ஆற்றிவரும் அளப்பரும் சமுதாயத் தொண்டு பற்றிக் கேட்டறிந்தோம். இருப்பினும் கருத்த சிந்தனை ஒருமைப்பாட்டோடு, நேரடித் தொடர்பும் இப்பொழுது எமது இயக்கத்துடன் ஏற்பட்டது பற்றி மட்டற்ற மகிழ்ச்சி. தொடர்ந்து இது நிலவவேண்டுமென்பது எமது அவா. 'காந்தியம்' மலர்களுக்கு நன்றி பல.

கி. ஞானசூரியன்
சிறப்பாசிரியர்,
லண்டன் முரசு.

சர்வோதய சேவாச் சிரமம்
இலண்டன்.

## அறிவிப்பு

'காந்தியம்' சம்பந்தமாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:—

நிர்வாகி.
காந்தீயம்
½, 47ஆவது ஒழுங்கை, ஏ
கொழும்பு-6
தொலைபேசி:- 83579

## சிவஞானம் ஆணைக்குழு அறிக்கை

கிளிநொச்சி-உருத்திரபுரத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்க ஆதரவில் நடைபெற்றுவரும் காந்தி நிலையத்தைப் புனரமைப்பது பற்றிய சிவஞானம் ஆணைக்குழுவின் அறிக்கையை காந்தி சேவா சங்க நிர்வாக சபை ஆராய்ந்த பின் விசேட பொதுக்கூட்டத்திற்குச் சமர்ப்பிப்பதென தீர்மானித்துள்ளது.

இப்பத்திரிகை அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்காக விவேகானந்தர் மேடு, கொழும்பு - 13 சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இலங்கையில் புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org